1975 நவம்பர் 11]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். வடிவேல்: தலைவர் அவர்களே, இந்த வீதிவிடங்கன் கிராமத்தில் சிலைகள் கண்டுபிடிக்கப்பட்டு வெள்ளைக்காரன் காலத்திலேயே ஒப்படைக்கப்பட்டு பணமும் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சிலைகள் எத்தனை லட்சம் ரூபாய் பெறுமானமுள்ளவை? அவை எல்லாம் எலிவேட்டையின்போது கிடைத்த சிலைகள். ஆகவே, அவற்றைக் கண்டுபிடித்து எடுத்துக் கொடுத்த அந்த அரிசனங்களுக்குச் சன்மானம் கொடுக்கப்படுமா?

(முற்பகல் 10.00)

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, இந்தச் சிலை 1974 ஆம் ஆண்டில் வீதிவிடங்கன் கிராமத்தில் சாமிநாத சாம்பான் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. இந்தச் சிலை யாருக்கு உரிமை என்பதைக் குறித்து தஞ்சை மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வருகிறது. அது முடிந்த பிறகுதான் முடிவுகள் மேற்கொள்ளப்படும்.

பச்சூர் சென்றாயசாமி கோயில்

*301 வினா—**திரு. டி. சி. திம்மராய கவுண்டர்:** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடார்க்காடு மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், பச்சூர் சென்றாயசாமி கோயிலை அறநிலையத் துறையின் கீழ்க் கொண்டு வரும் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: இத்திருக்கோயில் ஏற்கனவே இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கீழ் உள்ளது.